



பாகம் 1

நம் அனைவருக்கும் அதிகரித்து வரும் சுகாதாரச் செலவுகள் கவலையைத் தருகிறது. சிங்கப்பூரில் அரசாங்கத்தின் அதிகமான சலுகைகளுடன் 3M வழிகளில் - மெடிசேவ், மெடிஷீல்டு மற்றும் மெடிபண்ட் மூலமாகவும் சலுகைகள் கொடுக்கப்பட்டு சிங்கப்பூரர்களுக்கு சுகாதாரச் செலவு கட்டுக்குள்ளேயே வைக்கப்பட்டிருக்கிறது. நான்கு பகுதியாக வெளிவரும் தொடரின் முதல் பகுதியில் சுகாதார அமைச்சு கட்டுப்படியாகும் சுகாதார செலவின் அடிப்படை பற்றி உங்களுக்கு கொண்டுவருகிறது.

# மருத்துவமனை ரொக்க கட்டணத்தை மெடிசேவ் குறைக்கிறது

கடந்த ஜூலையில் பெருங்குடல் அடிப்பகுதி புற்றுநோய் தனக்கு இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்ட போது அன்னி வாங், 45 இடிந்துபோனார். சிங்கப்பூரில் பொதுவாக புற்றுநோயுக்கு இவ்வகையே காரணமாய் உள்ளது. தனது மலத்தில் இரத்தம் இருப்பதை கண்டவுடன் இவர் மருத்துவரை அனுகினார். வயது 12 மற்றும் 16 ஆகும் இரு பையன்களுக்கு தாயாரான அவருக்கு இக்கண்டுபிடிப்பு சோகமானதாகவும் பயமுறுத்துவதாகவும் இருந்தது. அன்னியால் மருத்துவ செலவைப்பற்றிக் கவலைபடாமல் இருக்க முடியவில்லை. ”புற்றுநோயுக்கான சிகிச்சை செலவு மிக அதிகம் என்று எனக்குத் தெரியும். அதற்கான அறுவை சிகிச்சைக்கு பிறகு மருத்துவமனையில் தங்கி பூரண குணமடைவதுடன் நீண்ட காலத்திற்கு இராசாயன சிகிச்சையும் பெற வேண்டியிருக்கும். என்னுடைய கணவருக்கும் ஏற்கனவே புற்றுநோய் இருக்கிறது. எனவே, எங்களின் சேமிப்பில் ஒரு பகுதி குறைந்துவிட்டது,” என அவர் புலம்பினார்.



“எனக்கும் எனது குடும்பத்திற்கும் அது நிம்மதியைத் தந்தது. நான் தற்போது பூரண குணமடைவதில் கவனம் செலுத்துவதோடு இராசாயன சிகிச்சையையும் தொடரலாம்,”
*- அன்னி ஓங்*

தனது குடும்பத்தை கவனிப்பதற்காக எட்டு வருடங்களுக்கு முன்பு நன்கு வருமானம் தரக்கூடிய செயலாளர் வேலையை அன்னி விட்டுவிட்டார். தனது நோயால் இரட்டை வருமானம் இல்லா தனது குடும்பத்திற்கு நிதி சுமை ஏற்படும் என அவர் கவலைப் பட்டார். “புற்றுநோயின் காரணத்தால் குடும்பத்துக்காக சமைக்க, சுத்தம் செய்ய மற்றும் பிள்ளைகளுக்கு பாடம் எடுக்க முடியாது. எனவே, பணிப்பெண் ஒருவரையும் துணைப்பாட ஆசிரியர் களையும் அமர்த்த வேண்டியிருக்கும்” என அன்னி விவரித்தார்.

பெருங்குடலின் அடிப்பகுதியில் உள்ள தேவையற்ற வளர்ச்சியை அகற்ற அன்னி அறுவை சிகிச்சைக்குச் சென்றார். தேசிய பல்கலைகழக மருத்துவமனையில் ஆறு நாட்கள் தங்கி இருந்தார். **மருத்துவ செலவு $15,391 ஆனது. ஆனால், அவர் அரசாங்கம் 65 விழுக்காடு வரை சலுகை அளிக்கும் B2 வார்டை தேர்ந்தெடுத்த தால் கட்டணம் $3,178 க்கு குறைக்கப்பட்டது.**

நமது பொது மருத்துவமனைகளில், தங்களின் நிதி நிலவரத்திற்கு ஏற்ப நோயாளிகள் வெவ்வேறு வகை வார்டை தேர்ந்தெடுக்கலாம். B2 & C வகுப்பு வார்டுகளில் நோயாளிகளின் சிகிச்சை கட்டணத்தில் 80 விழுக்காடு வரை சலுகை அளிக்கப்படுகிறது.

தனி தொலைபேசி மற்றும் குறிப்பிட்ட மருத்துவரை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு போன்ற வசதிகள் இல்லா “சலுகை” வார்டு அன்னிக்கு போதுமானதாக இருந்தது. அதிக கட்டண வார்டை போல் அண்மைய வீரியமுள்ள மருந்துகளே கொடுக்கப்படுகிறது என அவருக்குத் தெரியும். பல வீவக வாசிகளைப் போன்று அன்னியின் கவலை மருத்துவக் கட்டணத்திற்காக செலுத்தப்பட வேண்டிய ரொக்கப் பணத்தை பற்றியே.

அதிர்ஷ்டவசமாக B2 வார்டை தேர்ந்தெடுத்ததால் அன்னிக்கு மருத்துவ செலவில் அதிகமாக சேமிக்க முடிந்தது. **அவர் செலுத்த வேண்டிய சலுகை கட்டணமான $3,178 -ல் அவர் ரொக்கமாக $678 தான் செலுத்தினார். மீதி தொகையான $2,500 அவரின் மெடிசேவிலிருந்து கட்டப்பட்டது.** அவரிடம் மேலும் $20,000 மெடிசேவும் சொந்த சேமிப்பும் இருப்பதால் மருத்துவ சிகிச்சையை தொடர முடியும்.

**அன்னியின் மருத்துவக் கட்டண பட்டியல் விவரம்**

| | | |
|---|---|---|
| அரசாங்கச் சலுகைக்குப் பிறகு மொத்த கட்டணம்வ் | | **$3,178** |
| தங்கியிருந்த நாட்கள்வ் | வ் | **6** |
| மெடிசேவிலிருந்து கட்டப்பட்டதுவ் | வ் | **$2,500** |
| தங்கியிருந்த நாட்களைப் பொருத்து கோரக்கூடிய மெடிசேவ் தொகை (அதிகபட்சம் நாளொன்றுக்கு $300)வ் | $1,800 | |
| அறுவை சிகிச்சைக் கட்டணம்வ் | $700 | |
| நோயாளி செலுத்தியது ($3,178 - $2,500)வ் | | **$678** |
| நோயாளி செலுத்திய ரொக்கத்தின் விழுக்காடுவ் | | **21%** |

# மெடிஷீல்டு செலுத்துகிறது

அன்னியைப் போல் திரு. லிம் யூவ் கீயும் கடந்த அக்டோபரில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது அவருக்கு கிடைத்த அரசாங்க சலுகையுடன் மெடிசேவ் மற்றும் மெடிஷீல்டு செலுத்திய கட்டணத்தையும் அவர் பாராட்டினார். அவர் திறந்த இருதய அறுவை சிகிச்சை செய்துகொண்டார். (இது கோரனரி ஆர்டரி பைபாஸ் கிராஃப்ட் என்றும் அழைக்கப்படுகிறது). அவர் B2 வார்டில் மொத்தம் 10 நாட்களுக்கு தங்கினார்.

வயது 40 ஆகும் விற்பனை மேற்பார்வையாரான அவரும் அவரது குடும்பமும் மருத்துவ செலவு, அதனால் அவர்களது சிறிதளவு சேமிப்பின் மீதான விளைவு மற்றும் மருத்துவமனை தங்கியிருப்புச் செலவுகளைப் பற்றியும் கவலை அடைந்தனர். அது மனத்தளவில் மிகவும் சோதனையான காலம். **“மருத்துவச் செலவு மிகவும் அதிகமானால் அதற்காக என்னுடைய மனைவி ஒரு பகுதி நேர வேலைக்குச் செல்ல வேண்டியிருந்தால் யார் குழந்தைகளைக் கவனிப்பது என அவர் கவலைப்படுகிறார்.”** என திரு. லிம் கூறினார். மேலும் அவர் கூறுகையில், “எனது பிள்ளைகள் மிகவும் சிறுவயதினர். அவர்களுக்கு மூன்று, ஆறு மற்றும் ஒன்பது வயதே ஆகிறது. எனவே, தாயார் அருகில் இருப்பதே நல்லது என நாங்கள் நினைக்கிறோம்.” இப்பிரச்னைகளுக்கு திரு. லிம் அறுவை சிகிச்சைக்கு போகும் முன்பு தீர்வு காணப்படவில்லை.

அவருடைய அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடந்தது. ஆனால், மருத்துவமனையில் இருந்து வெளியான போது மிக அதிகமான மருத்துவ கட்டணம் $13,200 வந்தது. ஆனால், அதிர்ஷ்டவசமாக கால ஓட்டத்தில் போதுமான மெடிசேவ் சேமிப்பையும் மெடிஷீல்டு பாதுகாப்பையும் பெற்றிருந்தார்.

அவர் தனது கையிலிருந்து ஒரு காசுக் கூட கட்டத் தேவையில்லை என்பதை தெரிந்துகொண்டபோது பெரிய சுமைக் குறைந்தது. அதற்கு அவர் மெடிசேவ், மெடிஷீல்டு மற்றும் B2 வார்டுக்கான 65 விழுக்காடு அரசாங்கச் சலுகைகளுக்கு நன்றி கூறவேண்டும்.

**“எனது மருத்துவ காப்புறுதியும், மெடிஷீல்டு கண்ட மாற்றமும் கட்டணத்தில் பெரும்பகுதியை செலுத்த உதவியது மகிழ்ச்சியளிக்கிறது. நான் ரொக்கப் பணம் செலுத்தத் வேவையில்லை என்பதை என்னால் நம்பமுடியவில்லை.” என திரு.லிம் கூறினார்.**

**யூவ் கீயின் மருத்துவக் கட்டண பட்டியல் விவரம்**

| | | |
|---|---|---|
| அரசாங்கச் சலுகைக்குப் பின் மொத்த கட்டணம்வ் | | $4,240 |
| தங்கியிருந்த நாட்கள்வ் | வ் | 10 |
| மெடிஷீல்டுக் கட்டியது ($4,240-$1,500-$369)வ் | | $2,371 |
| கழிவு: குறைக்கக்கூடியவைவ் | $1,500 | |
| கழிவு: காப்புறுதித் தொகைவ் | $369வ் | |
| மெடிசேவிலிருந்து கட்டப்பட்டதுவ்வ் | | $1,869 |
| நோயாளி செலுத்தியது ($4,240-$2,371-$1,869)வ் | | $0 |
| மெடிஷீல்டு செலுத்திய தொகையின் விழுக்காடுவ் | | 56% |
| மெடிசேவ் செலுத்திய தொகையின் விழுக்காடுவ் | | 44% |

## 3M வழிகளில் சுகாதார செலவு கட்டுப்படியாக இருக்கிறது

### மெடிசேவ்

இது 1984-ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கட்டாய சேமிப்பு. இதன் வழி தனிநபர்கள் தங்களின் வருமானத்தில் ஒரு பகுதியை மசேநிதிக்குச் செலுத்துகின்றனர். இதை தங்களது சொந்த அல்லது உடனடி குடும்ப உறுப்பினரின் மருத்துவ செலவுக்கு பயன்படுத்தி கொள்ளலாம். தங்கியிருந்து பெறும் சிகிச்சைக்கும், சில சிறிய அறுவை சிகிச்சைக்கும் மற்றும் சில அங்கீகரிக்கப்பட்ட வெளிநோயாளி சிகிச்சைக்கும் மெடிசேவை பயன்படுத்தலாம். உங்களின் மெடிசேவ் சேமிப்புக் கும் மசேநிதியின் தற்போதைய வட்டி விகிதத்தில் வட்டி கிடைக்கும்.

2004-ம் ஆண்டு இறுதியில் உறுப்பினரின் சராசரி மெடிசேவ் இருப்பு $12,000. இது C வகுப்பு தங்கியிருந்து பெறும் சிகிச்சை கட்டணமான $800 உடன் ஒப்பிடும் போது பெரிய தொகையாகும்.

சிங்கப்பூரர்களில் 85% உள் நோயாளிகள் மெடிசேவை தங்களது மருத்துவமனை சிகிச்சை கட்டணங்களுக்கு பயன்படுத்தினர்.

### மெடிஷீல்டு

மெடிஷீல்டு குறைந்த கட்டண அவசரகால காப்புறுதி திட்டமாகும். இது 1990-ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இதை உறுப்பினர்களும் அவரைச் சார்ந்தோர்களும் நீண்டகால கடுமையான நோய்களுக்கு சிகிச்சைப் பெற பயன்படுத்திகொள்ளலாம். இச்சூழலில் மெடிசேவ் மட்டும் போதுமானதல்ல. மெடிஷீல்டு இன்டன்சிவ் கேர், அறுவை மற்றும் உறுப்பு மாற்று சிகிச்சைகள் போன்ற மருத்துவமனை செலவுகளை உள்ளடக்கியது. இது மேலும் வெளிநோயாளி கிட்னி டயலிசிஸ், இராசாயன மற்றும் ஒளிக்கதிர் சிகிச்சைகளையும் உள்ளடக்கியது.

மெடிஷீல்டு ஜூலை 2005-ல் சிறப்பு சலுகைகள், உறுப்பினர் விசுவாச தள்ளுப்படி திட்டம் மற்றும் காப்புறுதி செய்யக்கூடிய வயது வரம்பை 80 லிருந்து 85 க்கு உயர்த்துவது போன்ற மேம்பாடுகளைக் கண்டது. இந்த சீர்திருத்தத்தால் நோயாளி B2/C வார்டுகளுக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தில் 60% வரை குறைந்தது. ஆனால், ஏற்கனவே இது 30% ஆக தான் இருந்தது.

### மெடிபண்ட்

மெடிசேவ் மற்றும் மெடிஷீல்டு உதவிக்குப் பிறகும் மீதி ரொக்கத்தை செலுத்த முடியாத தேவையுள்ள சிங்கப்பூரர்கள் மெடிபண்டை நாடலாம். இது மருத்துவ கட்டணத்தை செலுத்த முடியாதவர்களுக்கு உதவுவதற்காக அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு மானியமாகும். நோயாளிகள் மருத்துவ சமூக சேவையாளர்களின்(MSW) வழி விண்ணப்பிக்கலாம். ஒவ்வொரு பொது மருத்துவமனையிலும் ஒவ்வொருவரின் தகுதியையும் நிர்ணயிக்க மெடிபண்ட் குழு ஒன்று உள்ளது.

நிதி உதவி தேவைப்பட்ட B2/C வார்டு நோயாளிகள் 16,400 பேருக்கு 2004-ம் ஆண்டில் $16.1 உதவி

